ஆலங்குளம் தேர்வு நிலை பேரூராட்சி,
திருநெல்வேலி மாவட்டம்.

ந.க.எண். 65/10 நாள் : – 01.06.2010

## அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டம் 2010–11

## நாடு தழுவிய ஒப்புநோக்கு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு

1. ஆலங்குளம் தேர்வு நிலை பேரூராட்சியில் அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தில் கீழ்க்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பணிகளை செய்வதற்கு ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் தகுதியான ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பகிரங்கமாக பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தக்காரர்கள் மத்திய அரசு அல்லது மாநிலஅரசு அல்லது மத்திய அரசு மாநில அரசு சார்ந்த நிறுவனங்களிலிருந்து பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்களாக இருக்கவேண்டும். மேலும் ஒப்பந்தக்காரர்கள் வகுப்பு 1 மற்றும் வகுப்பு 2ல் தகுதியுடைய ஒப்பந்தக்காரர்களுக்கு பணிகள் வழங்கப்படும்.

2. ஆலங்குளம் தேர்வு நிலை பேரூராட்சியில் கீழ்க்கண்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளுக்கு ஒப்பந்தக்காரர்கள் மூலம் ஒப்பந்தப்புள்ளிகளை இப்பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களால் வரவேற்கப்படுகின்றன

3. பணிகளுக்கு உரிய ஒப்பந்தப் படிவங்களை 01.06.2010 முதல் 17.06.2010 பிற்பகல் 5.00 மணி வரை உள்ள வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் உரிய தொகையினை ஆலங்குளம் பேரூராட்சி அலுவலகத்தில் செலுத்தி அல்லது செயல் அலுவலர் ஆலங்குளம் தேர்வு நிலை பேரூராட்சி என்ற முகவரிக்கு வங்கி வரைவோலை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். மேலும் ஒப்பந்தபுள்ளி படிவங்களை கணிணி மூலம் On line Website மூலம் பெற்று கொள்ளலாம்.

4. ஒவ்வொரு பணிக்கும் அதன் எதிரே குறிப்பிடப்பட்டுள்ள டேவணித் தொகையை ரொக்கமாகவோ, அல்லது வரைவோலையாகவோ செயல்அலுவலர் ஆலங்குளம் தேர்வு நிலை பேரூராட்சி என்ற முகவரிக்கு செலுத்தப்படவேண்டும்.

5. ஒப்பந்தப்புள்ளிகளை ஆலங்குளம்பேரூராட்சி செயல் அலுவலராலோ அல்லது அவரது அதிகாரம் பெற்றவராலோ 18.06.10ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 3.00மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் ஆலங்குளம் பேரூராட்சி செயல்அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற அலுவலரால் வருகைதந்துள்ள ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் அன்றைய தினம் மாலை 3.30 மணிக்கு திறக்கப்படும். ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாள் விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டால் அதற்கு அடுத்த வேலை நாளில் அதே நேரத்தில் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு அன்றைய தினம் திறக்கப்படும்.

6. இதர விபரங்களை ஒப்பந்தப்புள்ளி படிவத்தில் பார்த்து தெரிந்து கொள்ளலாம்.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) | டேவணித் தொகை | ஒப்பந்தப் புள்ளி படிவத்தின் விலை |
|---|---|---|---|---|
| 1 | **தார்சாலை அமைத்தல்**<br><br>துத்திகுளம் ரோடு முதல் தென்காசி மெயின்ரோடு வரை தார்சாலை அமைத்தல் மற்றும் பாலம், தடுப்புசுவர் அமைத்தல் | 13.00 | 13000/– | 6240/– |
| 2 | **சமுதாய நலக்கூடம் அமைத்தல்**<br><br>2வது வார்டு மார்க்கெட் தென்புறம் நெட்டூர் ரோட்டிற்கு கீழ்புறம் சமுதாயகூடம் கட்டுதல். | 15.00 | 15000/– | 6240/– |
| 3 | **ஊரணி குளம் குட்டை / பூங்கா மேம்பாடு**<br><br>11வது வார்டு தென்காசி ரோடு மெயின் ரோடு ஊரணி கிணறு அருகில் சிறுவர் விளையாடும் பூங்கா அமைத்தல் | 10.00 | 10000/– | 6240/– |
| 4 | **குடிசைப்பகுதியில் சிமெண்ட் சாலை அமைத்தல்**<br><br>1வது வார்டு குருவன்கோட்டை தெருவில் சிறிய குறுகிய பகுதிகளில் சிமெண்ட் சாலை மற்றும் வாறுகால் அமைத்தல் | 6.50 | 6500/– | 1560/– |
| 5 | **பேருந்து நிலையம் / நாளங்காடி / சந்தை மேம்பாடு**<br>பேரூராட்சிக்குச் சொந்தமான மார்க்கெட்டில் வணிக வளாகம் அமைத்தல் | 6.00 | 6000/– | 1560/– |
| | **அரசாணை பகுதி 6 (ii) ன்படி மாற்றுப்பணி**<br>5வது வார்டு புதுப்பட்டி சாலையில் பெண்கள் கழிப்பறை அமைத்தல் | 4.00 | 4000/– | 780/– |
| 6 | **சுடுகாடு / இடுகாடு மேம்பாடு செய்தல்**<br><br>8வது வார்டு அம்பைரோடு சுடுகாடு மயான எரிமேடை அமைத்தல் மற்றும் பாதுகாப்புச் சுவர் அமைத்தல் | 7.00 | 7000/– | 1560/– |
| 7 | **பேரூராட்சியின் விருப்பப்படியான அத்தியாவசிய பணிகள்**<br>புதிய பேருந்து நிலையம் பின்புறம் 9வது வார்டு அம்பை ரோடு முதல் 11வது வார்டு அருள்மிகு.ஸ்ரீ முருகன் கோவில் வரை தார்சாலை மற்றும் தடுப்புச்சுவர் அமைத்தல் | 7.00 | 7000/– | 1560/– |

## நிபந்தனைகள்

1. ஒவ்வொரு பணிக்கும் தனித்தனியாக ஒப்பந்தப்புள்ளிகள் கொடுக்கவேண்டும்.
2. ஒப்பந்தக்காரர்கள் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளும் போது ஒப்பந்தக்காரரின் நிதிநிலைமை பொருளாதார நிதிநிலை குறித்த அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும். ஒப்பந்தக்காரர்களாக உரிய கட்டணம் செலுத்தி பதிவு செய்திருத்தல் வேண்டும்.

## சிறப்பு நிபந்தனைகள்

3. ஒப்பந்தப்புள்ளிகள் கொடுப்பதற்கு தகுதி வாய்ந்த ஒப்பந்தக்காரர்கள் அவர்களின் பெயரில் கட்டாயமாக கடந்த மூன்றாண்டுகளில் 2006–2007 முதல் 2009–2010 வரை குறைந்த பட்சம் இரண்டு நிதி ஆண்டுகளில் வருடாந்திரநிதி செயல்திறன் தற்போது கேட்கப்படும் ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீட்டிற்கு இரண்டரை மடங்கு அளவிற்கு கூடுதலாக கட்டுமான பொறியியல் பணிகள் செய்திருக்க வேண்டும்.

4. மேற்கண்ட பணிகளுக்கு தேவைப்படும் அனைத்து பொருட்களை ஒப்பந்தக்காரர்கள் தங்களது சொந்த பொறுப்பில், அனைத்துப் பொருட்களும் I.S.I தரம் கொண்டதாக வாங்கி பயன்படுத்துதல் வேண்டும். அவ்வாறு வாங்கப்படும் பொருட்கள் தரம் மற்றும் அளவு நிர்ணயிக்கப்பட்ட அளவு கோலுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும். தரத்தை குறித்த தேவையான சான்று சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

5. அமைக்கப்படும் பணிகள் ஒப்பந்தக்காரர் பணியினை முடிக்கும் நாளிலிருந்து ஒரு வருடம் முடியும் வரையில் ஏற்படும் அனைத்து பராமரிப்பு பணிகளையும் தன்சொந்த செலவிலேயே மேற்கொள்ளுதல் வேண்டும். கூடுதல் வைப்புத் தொகை மேற்படி மதிப்பீட்டில் 5 % செலுத்தப்படவேண்டும்.

6. சப்ளை செய்யும் நிறுவனம் விநியோகிஸ்தர் (Distributor) என்பதற்கான சான்று தரவேண்டும்.

7. சப்ளை செய்யும் சாமான்களுக்கு தர உறுதி சான்று (Gurantee Certificate) வழங்கப்பட வேண்டும்.

8. ஒப்பந்தப்புள்ளி உதவி செயற்பொறியாளர் பரிந்துரை பெற்ற பின் ஆலங்குளம் பேரூராட்சி மன்றத்தின் அனுமதி பெற்ற பின்பு வேலை உத்தரவு வழங்கப்படும்
.

9. சப்ளை செய்யப்பட்ட பொருட்களுக்கு பட்டியல்படி திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குனர் அனுமதி பெற்று தொகை பட்டுவாடா செய்யப்படும்.

10. டெண்டர் பெறப்படும் நாள் விடுமுறையாக அறிவிக்கப்பட்டால் அதற்கு அடுத்த வேலை நாளில் அதே நேரத்தில் பெற்றுத் திறக்கப்படும்.

11. மேற்கண்ட பணிகள் முடிக்கப்படும் நிலையில் சம்பந்தப்பட்ட உயர்அலுவலர்களால் ஆய்வு செய்யப்படும்.

12. இதர விபரங்கள் அலுவலக நேரங்களில் அலுவலகத்தில் நேரில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

செயல்அலுவலர்,
தேர்வு நிலை பேரூராட்சி,
ஆலங்குளம்.

**பெறுநர்**
அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்தக்காரர்கள்
ஆலங்குளம் பேரூராட்சி

**நகல் :-**

1. திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
2. உதவி செயற்பொறியாளர் அவர்கள், திருநெல்வேலி,
3. உதவிப் பொறியாளர் அவர்கள், மணிமுத்தாறு பேரூராட்சி (பொறுப்பு ஆலங்குளம்) தகவலுக்கு
4. நிர்வாக அதிகாரி பேரூராட்சி அலுவலகம், சுரண்டை, கீழப்பாவூர், இலஞ்சி, ஆய்குடி
5. அலவலக விளம்பர பலகைக்கு
6. கோப்பு